
NSW GOVERNMENT

# ‘பெஸ்ட் ஸ்டார்ட் கிண்டர்கார்ட்டன் மதிப்பீடு’

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கானதொரு வழிகாட்டி

**‘பெஸ்ட் ஸ்டார்ட் கிண்டர்கார்ட்டன் மதிப்பீடு’ என்பது ‘கிண்டர்கார்ட்டன்’ கல்வியை ஒவ்வொரு பிள்ளையும் துவங்கும் பொழுது அவர்களுக்கு இருக்கும் ஆங்கில எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்களை அடையாளம் காண ஆசிரியர்களுக்கு உதவும் மாநிலமளாவிய ஒரு மதிப்பீட்டு முறையாகும்.**




தம்மைச் சுற்றியுள்ள உலகம் மற்றும் ஆட்களிடமிருந்து தாம் கொள்ளும் தொடர்புகளிலிருந்து உருவாக்கிக்கொண்ட ஆரம்ப-நிலை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் திறன்கள், அறிதல்கள் மற்றும் புரிதல்கள் ஆகியவற்றுடன் குழந்தைகள் தமது பாடசாலைப் படிப்பைத் துவங்குகிறார்கள். எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுக் கூறுகளை ‘பெஸ்ட் ஸ்டார்ட் கிண்டர்கார்ட்டன் மதிப்பீடு’ உள்ளடக்கியிருக்கும், அத்துடன் அது பிள்ளைகளுடைய தனி-நபர் ஆற்றல்கள் மற்றும் தேவைகளைப் பற்றிய தகவல்களை ஆசிரியர்களுக்குக் கொடுக்கும்.

பிள்ளைகளுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் கற்பித்தல் மற்றும் கற்றல் குறித்த திட்டங்களை உருவாக்க ஆசிரியர்களுக்கு இந்த மதிப்பீடு உதவும். ஒவ்வொரு பிள்ளையாலும் என்ன செய்ய இயலும் என்பதன் மீது கவனம் செலுத்தும் விதமாக ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையுடனும் தனித்தனியாக அமர்ந்து மதிப்பீட்டினை மேற்கொள்வர். இந்த மதிப்பீட்டிற்காக உங்களுடைய பிள்ளை தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவோ, படிக்கவோ தேவையில்லை. பிள்ளைகள் கற்கும் வீதமானது ஒவ்வொரு பிள்ளைக்கும் வெவ்வேறானதாக இருக்கும் என்பதால், அனைத்துக் கேள்விகளுக்கும் உங்களுடைய பிள்ளையால் பதிலளிக்க இயலாது.

இந்த மதிப்பீட்டின் பொழுது உங்களுடைய பிள்ளை வெளிப்படுத்திய திறன்கள், அறிவு மற்றும் புரிதல்களைப் பற்றிய தகவல்களை இந்த மதிப்பீட்டையடுத்த சிறிது காலத்தில் ஆசிரியர்கள் உங்களுக்குக் கொடுப்பர்.

இந்த ‘பெஸ்ட் ஸ்டார்ட் கிண்டர்கார்ட்டன் மதிப்பீடு’ அனைத்துப் பிள்ளைகளையும் உள்ளடக்குவதாகும். ஆங்கிலம் உங்களுடைய வீட்டில் பேசப்படும் மொழி அல்ல என்றால், அல்லது சில சரிப்படுத்தல்கள் உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்பட்டால், உங்களுடைய பிள்ளைக்கு எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு உங்களுடைய பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

### எழுத்தறிவு மதிப்பீடு

தமது பெயர்களை எழுதவும், ஒலிகள், எழுத்துகள் மற்றும் பரிச்சயமான வார்த்தைகள் ஆகியவற்றை விளங்கிக்கொள்ளவும் பிள்ளைகளால் இயலுகிறதா என்பதையும், அவர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்ட சிறு புத்தகம் ஒன்றைப் பற்றிய விபரங்களை அவர்களால் நினைவுகூர இயலுகிறதா என்பதையும் அடையாளம் காண்பதற்காக இந்த எழுத்தறிவு சம்பந்தப்பட்ட கேள்விகள் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

எழுத்தறிவு மதிப்பீட்டின் பொழுது, பின்வருவனவற்றைப் போன்ற கேள்விகளை ஆசிரியர் உங்களுடைய பிள்ளையிடம் கேட்பார்:

- ‘இந்த வார்த்தைகளைக் காது கொடுத்துக் கேளுங்கள்: map, tap. இதைப் போல ஒத்திசைக்கும் இன்னொரு வார்த்தையை உங்களால் சொல்ல இயலுமா?
- (சிறு புத்தகம் ஒன்றை பிள்ளைக்கு வாசித்துக் காண்பித்த பிறகு) ‘நான் இப்போது உங்களுக்கு வாசித்துக் காண்பித்த கதையைப் பற்றி உங்களால் சொல்ல இயலுமா?

ஒரே மாதிரியாக ஒலிக்கும் வார்த்தைகளை அடையாளம் காணவும், அவர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்ட சிறு புத்தகத்திலிருந்து தகவல்களை நினைவுகூரவும் உங்களுடைய பிள்ளையால் இயலுமா என்பதைத் தீர்மானிக்க இந்த கேள்விகள் ஆசிரியர்களுக்கு உதவும். பாடசாலைப் படிப்பின் முதலாவது ஆண்டில் பிள்ளைகள் வளர்த்துக்கொள்ளும் முக்கியமான எழுத்தறிவுத் திறன்களாகும் இவை.

### எண்ணறிவு மதிப்பீடு

எண்ணறிவு சம்பந்தப்பட்ட கேள்விகள் ஆரம்பகால வயதில் பிள்ளைகள் வளர்த்துக்கொள்ளும் எண்களைப் பற்றிய கருத்துகள் சம்பந்தப்பட்டவையாக இருக்கும், மற்றும் ஒரு பிள்ளையினால் எண்ண இயலுமா, எந்த எண்களை அவர்களால் அடையாளம் காண இயலுகிறது, பொருட்களை அவர்களால் எண்ண இயலுமா, சிறு எண்களைக் கூட்டவும், கழிக்கவும், மற்றும் ஒரே விதமான மாதிரிகளை அடையாளம் காணவும் அவர்களால் இயலுமா என்பதைக் கண்டறியும் நோக்கத்தில் இந்தக் கேள்விகள் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

எண்ணறிவு மதிப்பீட்டின் பொழுது, பின்வருவனவற்றைப் போன்ற கேள்விகளை ஆசிரியர் உங்களுடைய பிள்ளையிடம் கேட்பார்:

- ‘ஒன்றில் இருந்து மேற்கொண்டு எண்ணுங்கள், நீங்கள் எப்போது நிறுத்தவேண்டும் என்று நான் உங்களுக்குச் சொல்வேன்’
- ‘இந்த எண் என்ன என்று உங்களால் சொல்ல இயலுமா?’ (5)

உங்களுடைய பிள்ளையினால் எண்களை அடையாளம் காண இயலுமா என்றும், ஒன்றில் இருந்து மேற்கொண்டு அவர்களால் எண்ண இயலுமா என்றும் தீர்மானிக்க இந்த கேள்விகள் ஆசிரியர்களுக்கு  உதவும். அவர்களுடைய பாடசாலைப் படிப்பின் முதலாவது ஆண்டில் பிள்ளைகள் வளர்த்துக்கொள்ளும் முக்கியமான எண்ணறிவுத் திறன்களாகும் இவை.

**‘பெஸ்ட் ஸ்டார்ட் கிண்டர்கார்ட்டன் மதிப்பீ’ட்டைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு உங்களுடைய பிள்ளையின் பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.**
**மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், 131 450-இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யுடன் தொடர்புகொள்ளுங்கள். பாடசாலையுடனான உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர்கள் ஏற்பாடு செய்வர். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.**